## சுருக்கம்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை – 2014, 2015, மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை மற்றும் 2017, 2018, மற்றும் 2019–ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க ஏற்கெனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்த நிலையில் மேலும் மூன்று மாதங்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ட்டி2)த் துறை

அரசாணை (டி) எண். 548 — நாள்: 02.12.2021

பிலவ வருடம், கார்த்திகை 16

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கவும்:–

1. அரசாணை (டி) எண் 204, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ட்டி.2)த் துறை நாள் 28.05.2021.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடித எண். ப.ப./17263/ 2021, நாள். 07.09.2021 மற்றும் 16.09.2021.

*****

**ஆணை:–**

2021–2022 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் மானியக்கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பின்னர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் 04.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**"வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, தங்கள் பதிவினை 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறிய சுமார் 48 இலட்சம் பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு, ஏற்கெனவே 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்று புதுப்பித்தல் சலுகை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்து வழங்கப்படும்"**

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையங்களில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தங்களது பதிவினை புதுப்பிக்க வேண்டும் எனவும், 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க தவறிய பதிவுதாரர்களுக்கு ஏற்கெனவே புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டும் பதிவினை புதுப்பிக்காமல் அதிக அளவில் உள்ள பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்குமாறும், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க தவறியவர்களுக்கு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டு, அவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை 27.08.2021 உடன் முடிவடைந்த நிலையில், இச்சலுகையை துய்க்காத பதிவுதாரர்கள் தங்களின் பதிவு மூப்பினை மீளப் பெறும் பொருட்டு, மேலும் மூன்று

மாதங்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கி ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி-2ல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையங்களில் 2014, 2015, மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை மற்றும் 2017, 2018, மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கான பதிவினை புதுப்பிக்க மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்கெனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில் மேலும் 3 மாதங்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கி பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) இச்சலுகையைப் பெற விரும்பும் வேலைநாடுநர்கள், அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விடுபட்ட பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

(ii) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

(iii) மூன்று மாதங்களுக்குப் பின் பெறப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

(iv) 01.01.2014-க்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. இவ்வாணை பற்றிய விவரங்களை இரண்டு முன்னிலை தமிழ் நாளிதழ்களில் வெளியிடுவதுடன், அனைத்து மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையங்களில் உள்ள தகவல் பலகையில் (Notice Board in all District Employment and Career Guidance Centres) பொது மக்களின் தகவலுக்காக காட்சிப்படுத்த வேண்டும் என அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்.

பெறுநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், கிண்டி, சென்னை-600 032.
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை - 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள்.
கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள், தலைமைச்செயலக துறைகள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை - 600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
செயலாளரின் முதன்மைச் தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-600 009.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை- 600 009.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல் / சுத்த நகல் கோப்புக்கு
(கோப்பு எண்.15650/ட்டி.2/2021)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மா. பரிமளா
2/12/2021

பிரிவு அலுவலர்.

2.12.21